# HOUSEHOLD LIFE IN THIRUKKURAL - A PHILOSOPHICAL STUDY

Premini Atputhanathan, BA, (Hons)
Eastern University, Sri Lanka
premikajan25@gmail.com

**Abstract**
Philosophy is the education of the world and life, and philosophy is transformed into a universal world when a thought pattern or method of thinking is formed as a guide to revising the world in which we live. Though many texts originate in the tradition of Tamil philosophical thought and depict the life style of the Tamil people, Thirukkural is one of the most comprehensive books on all aspects of human life. Thirukkural specializes in Tamil Philosophy, which is designed to address every man's needs first and foremost. Thirukkural insists on the moral principles that every man should adhere to. It is an undeniable fact that we can enjoy the benefits of being a human being without suffering and suffering only if we follow the lifestyle that Valluvar proposes for the greater part of life. Various aspects of human life are explained in Thirukkural. This is especially true of the area where the life of a non-partisan is known. If not good for a man, his life can be bitter. This is why home is important. Morality is part of the scope of the study of philosophy. Since the beginning of human history, the idea of morality has begun to take its toll. Morality has become a necessity to enrich and regulate human life. If man is to be glorified in this world or in the hereafter, he needs to live in this world with morals. The ethics of Tirukkural, which includes such moral thinking, is carried out by the analyst in the sense that a clear understanding of the subject is helpful to all activities of human life, as it is the basis of human life.

**Keywords**: Thirukkural, Thiruvalluvar, Morality, Human, Universal

**ஆய்வு அறிமுகம்**

உலகையும் வாழ்வையும் பற்றிய கல்வியே மெய்யியல். நாம் வாழ்கின்ற உலகைத் திருத்தி அமைக்கவல்ல வழிகாட்டியாக ஒரு சிந்தனை மாதிரி அல்லது சிந்தனை முறை அமைகின்ற போது மெய்யியல் உலகியலாக மாற்றம் பெறுகின்றது. தமிழர் மெய்யியல் சிந்தனை மரபில் பல்வேறு நூல்கள் தோற்றம் பெற்று தமிழருடைய வாழ்க்கை முறையினை சித்தரித்துக் காட்டினாலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் திறன்பட தொகுத்து வழங்கும் நூல் திருக்குறள் ஒன்றே. ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான விடயங்கள் முதல், எவற்றை எல்லாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக செம்மைப்படுத்தப்பட்ட வகையில் திருக்குறள் நூல் தமிழர் மெய்யியலில் சிறப்பிடம் பெறுகின்றது.

திருக்குறள் ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய அறக் கருத்துக்களை வலியுறுத்தி நிற்கின்றது. அதிலும் வாழ்வின் பெரும் பகுதியான இல்லறம் தொடர்பாக வள்ளுவர் முன்வைக்கும் வாழ்க்கை முறையை நாம் வாழ்வில் கடைப்பிடித்தாலே துன்பம் இன்றி துயர் இன்றி நாம் மனிதனாகப் பிறந்ததின் பயனையே அனுபவித்து விடலாம் என்பதே மறுக்க முடியாத உண்மை.

திருக்குறளில் மனித வாழ்வியலுடன் தொடர்புபட்ட பல்வேறு விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக அறத்துப்பால் எனும் பகுதி இல்லற வாழ்வின் பல்வேறு பண்புகளை வெளிக் கொணர்வதாக உள்ளது. ஒரு மனிதனுக்கு இல்லறம் சிறப்பாக அமையாவிட்டால் அவனது வாழ்வு எட்டிக் காய் போல் கசக்கலாம். இதனாலேதான் இல்லறம் முக்கியம் பெறுகின்றது.

ஒழுக்கம் என்பது மெய்யியலின் ஆய்வு செய்யும் விடயப் பரப்பினில் ஒரு பகுதியாகும். மனித வரலாறு தொடங்கிய காலம் முதலாகவே ஒழுக்கம் பற்றிய சிந்தனைகள் தலை தூக்கத் தொடங்கி விட்டது. மனித வாழ்வை செம்மைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் ஒழுக்கத்தின் தேவை வேண்டப்பட்டதொன்றாக மாறிவிட்டது. மனிதன் இவ்வுலகிலோ, மறுவுலகிலோ புகழ்பெற வேண்டுமானால் அவன் இவ்வுலகில் ஒழுக்க நெறியுடன் வாழ வேண்டியது அவசியமாகின்றது. இத்தகைய ஒழுக்க சிந்தனைகளை உள்ளடக்கியதே திருக்குறளின் இல்லறவியல் எனும் பகுதி.

மனித வாழ்க்கைக்கு அடித்தளமாக இல்லறம் அமையப் பெற்றிருப்பதனால் குறித்த இவ்விடயம் தொடர்பாக ஓர் தெளிவுடமை இருப்பதானது மனித வாழ்வின் சகல செயற்பாடுகளுக்கும் உதவுவதாக இருக்கும் எனும் வகையில் குறித்த இவ்வாய்வு ஆய்வாளனால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

**ஆய்வு கருதுகோள்**

இல்லறவியல் பல நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் திருவள்ளுவரின் திருக்குறளில் இல்லறம் பற்றிய விடயங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

திருக்குறளின் இல்லறவியல் மெய்யியல் நோக்கில் மானிட சமூகத்தை எத்தகைய விதத்தில் செம்மைப்படுத்துகின்றது?

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விற்கான தரவுகளும், தகவல்களும் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தளம் மூலம் பெறப்பட்ட தரவுகள், அறிக்கைகள் முதலியவைகளை தொகுத்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**திருக்குறள் பற்றிய அறிமுகம்**

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இந்நீதி நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் குறள் வெண்பாக்களால் கூறுதலின் முப்பால் நூல் எனவும், திருக்குறள் எனவும் பெயர் பெறும். ஒவ்வோர் அதிகாரமும் 10 குறட்பாக்களைக் கொண்ட 133 அதிகாரங்களையும் மொத்தமாக 1330 குறப்பாக்களையும் உடையது. பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல் எனும் மூன்று இயல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாயிரவியல் கடவுள் வாழ்த்து தொடக்கம் அறன் வலியுத்தல் வரையும், இல்லறவியல் இல்வாழ்க்கை தொடக்கம் புகழ் ஈறாக இருபது அதிகாரங்களையும் கொண்டமைந்தது. இறுதியில் துறவறவியல் அருளுடைமை தொடக்கம் ஊழ் வரையும் அமையப் பெற்றுள்ளது. குறித்த ஆய்வு இல்லறவியல் தொடர்பாக அமையப்பெற்றுள்ளமையினால் இல்லறவியலில் இடம்பெறும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப்பெறல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெ:்காமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் எனும் அதிகாரங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**திருக்குறள் காட்டும் இல்லற ஒழுக்கம்**

இல்லறத்தானுக்கு வேண்டப்படும் இல்லற ஒழுக்கம் தொடர்பான விளக்கங்களை அடக்கமுடைமை தொடக்கம் ஒப் புரவறிதல் ஈறாயும் வருகின்ற பத்து அதிகாரங்களில் அழகுற அமைத்துள்ளார் வள்ளுவர். ஒழுக்கத்தை உணர்த்தும் போது விலகத்தக்கவற்றைக் கூறிய வள்ளுவர் விரும்பியேற்கத் தகுந்தவை எவை என்பதையும் கூறுகிறார். அறநெறிக்குத் தன்னைத் தகுதியாக்கும் முன்னால் மனம், மொழி செயல்களை மனிதன் அடக்கியாளத் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரம், செல்வம், துணை வலிமை ஆகியவற்றை எல்லாம் பெரிதெனக் கொண்டாடிச் செருக்கோடு வாழ்வோர் ஒருவேளை அடக்கத்தைப் பின்பற்ற மறுக்கலாம். ஆனால் அறமுணர்த்த விரும்பும் வள்ளுவர் அறிவுறுத்தவும் விரும்புகிறார்.

அமர வாழ்வும் நரகவாழ்வும் வாழும் முறையால் வருபவையே. முன்னேறுவதற்குரிய வாய்ப்பு மிகுந்திருந்தாலும் சிலரது வாழ்வு எதிர்பாரா விதமாக இருளடைந்து போவதுண்டு. ஏதோ ஒரு வேகம் அதனை வெறியென்றாலும் சரிதான். கவ்விப்பிடித்து அலைக்கழிக்கும் போது சிந்திக்க இயலா நிலை உருவாகும். தெளிந்த நெஞ்சையும் அது திரையிட்டு மறைப்பதால் இடறிவிழுகின்றனர். கோபதாபம், அன்பு, துக்கம் எதுவானாலும் கூத்தாடும் உணர்ச்சிக்கு இரையாகி வாழ்க்கைச் சேற்றில் புதைந்து போகிறார்கள். அறிவின் தொடர்பறுந்து ஆன்ம விளக்கணைந்து

மனக்கோயில் இருளடைந்து விட்டால் மலர்ச்சி ஏது? வாழ்க்கைப் பயணமும் பாதியிலே நின்றுவிட்டால் விடுதலை ஏது?

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்" (குறள் : 121)

அடக்கமானது ஒருவனை உயர்த்திச் செல்லும். அவனைத் தேவருள் ஒருவனாக வைத்துச் சிறப்புச் செய்யும். அடங்காமல் திரிந்தால் அனுபவிக்க முடியாத பெருந்துன்பம் செய்யும் கொடிய நரகத்தில் கொண்டு தள்ளிவிடும்.

முறையான வாழ்வுதான் மனிதனது வாழ்க்கையை முழுமையாக்குகின்றது. என்பதை உணர்த்திடவே வள்ளுவர் ஒழுக்கமுடைமையை முன்வைக்கின்றார். விழுப்பம் தந்து துணையாக நிற்பது ஒழுக்கம். குடிச்சிறப்பு உயர்வதற்கும், நல்லறம் வித்தாக அமைவதற்கும் ஒழுக்கமுடைமையே கருவியாக அமைகின்றது. வெறுமனே புத்தக அறிவால் அதனைப் புரிந்து கொள்ள முடியாது. அது உலகத்தோடு ஒட்டவொழுகும் ஒரு பயிற்சி இதுவே சிறந்த கல்வி.

உயிரோடு இருப்பவர்கள் தம்மை மனிதரென்று மதிப்பது வீண்பெருமை. அகிலம் அதற்கு ஒப்புதல் அளிக்காது. மனிதத் தன்மையோடு வாழும் போதுதான் மனிதனாக முடியும். இல்லையென்றால் புதியதொரு விலங்காகப் புழுவிலும் கீழாக எண்ணிப் புறக்கணிப்பார்கள். நாம் காணும் உயிரோட்டம் வேறு ஒழுக்க நெறியில் இயங்கும் வாழ்க்கையோட்டம் வேறு. உயிர்பெற்ற வாழ்வை உயர்த்துவது ஒழுக்கம் ஒன்றேயாகும். மனித நிலை தரங்குறையாது இருப்பதற்கும் போற்றப்படுவதற்கும் பெரியோர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறையே காரணமாகும். வாழ்க்கையை விரும்பி உயிரைப் பேணியோர் வாழ்வின் சிறப்பை விரும்பி ஒழுக்கத்தை பேணினர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் : 131)

ஒழுக்கம் உடைமை என்ற அதிகாரத்தை அடுத்து "பிறன் இல் விழையாமை" என்ற அதிகாரத்தை வைத்து ஒழுக்கங்களுள் தலைசிறந்த ஒழுக்க நெறியை வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர். அழகுணர்ச்சியோ? அல்லது அதிசயமான காதல் உணர்ச்சியோ? எதுவென்றே சொல்வதற்கில்லை. தனது மனைவி தன்னருகில் நிற்கும் போதே அடுத்தவர் மனைவியை ஓரக் கண்ணால் உற்று நோக்கும் விநோத நடிப்பு இன்னும் பலரிடம் காணப்படுகிறது. பார்வையில் தொடங்கி பின்னர் பழக்கத்தில் முடிந்து இருவர் குடும்பமும் கொலைவாளில் சந்திக்கும் காட்சி முற்றும் மறைந்தபாடில்லை. கொடுத்து வாங்கும் கடைச் சரக்காக மனைவியரை மாற்றிக் கொள்ளும் பழக்கம், பகுத்தறிவுடைய சமுதாயத்தில் வளர்ந்தோங்க வேண்டுமா? அறம் கருதி வாழும் சமுதாய அமைப்பைப் பெரிதாக எண்ணுவோர் தன் குடும்பமும் அடுத்தவர் குடும்பமும் அமைதியாக அறப்பணியில் ஈடுபட வேண்டுமென விரும்புவதால் பிறனில் விழையாமை பெரியதோர் அறமென்று கொண்டனர்.

இல்லற நெறியினை காக்க விரும்பினால் அடுத்தவர் நெறியையும் ஆதரிக்க வேண்டும். தன் மனைவியின் கற்பைப் பெரிதாக மதிக்கும் ஆடவன் பிறன் மனைவியின் கற்பையும் பெரிதாக எண்ணி பெருமையளிக்க வேண்டியது அவசியமானது. தடம்புரண்டு போன எண்ணங்கள், புரையோடிப்போன உணர்வுகள் நெஞ்சைத் தாக்க இடமளிக்காமல் தன்னைக் காத்து நிற்பதே முதற்கடமை. வீரம், தீரம், இசைஞானம், இறையன்பு முதலிய நற்குணங்களை உடைய இராவணனின் சிறப்பெல்லாம் பிறன் மனைவியை நேசித்த போது இல்லாமல் போயிற்றே. காட்டில் வாழலாம் எனக் கருதி வந்த இராமனின் வாழ்வும் கருதிப் போயிற்றே. தருமத்தையே நெருப்பில் நிறுத்திப் பரிசோதிக்க நேர்ந்ததே. அசோக மரத்தடியில் கற்பு அழுதததே. ஒருவன் செய்த தவறு எத்தனையோ குடும்பங்களைப் பாழ்படுத்திவிட்டதே. இது போன்ற காவிய நிகழ்ச்சிகள் உண்மை வாழ்விலும் வந்துவிடக் கூடாது என விரும்பியே, பிறனில் விழையாமையைப் பெருந்தவமாக, பேராண்மையாக மதித்து எழுதுகிறார்.

எல்லாவற்றையும் விட உயர்ந்தது இன்பம் ஒன்றே எனக் கருதி இன்பத்தை அடைவதற்காக பிறருடைய மனைவியை நேசித்து அறம், பொருள் இரண்டையும் அழித்தோர் எண்ணில் அடங்காதோராவர். மனைவி என்பவர் பிறனுக்குரிய

செல்வம் அல்ல. ஆகவே அவளை தனக்குரிய செல்வமாக்கும் ஆசையில் விரும்பி ஒழுகும் அறிவை எவ்வாறு நல்லறிவு என்று கூறுவது. அது உண்மையில் பேதமையாகும். அறம், பொருள், இன்பம் மூன்றும் இணைந்து வாழ்வதே இல்லறம் என்று எண்ணாமல், இன்ப வெறிக்கு அறத்தையும் பொருளையும் பலியிடுகின்றனர். அறம், பொருள் என்பதை தெளிந்துணர்ந்த அறிவாளியிடம் அது போன்ற செயல் பிறப்பதுமில்லை இருப்பதுமில்லை.

''பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்'' (குறள் : 141)

மாற்றான் மனைவியை வஞ்சிப்பதும் நேசிப்பதும் ஒன்றே. ஆசையால் விரும்புவதும், அறியாமையால் விழைவதும் பேதையின் செயலே. சிலர் அறிவிருந்தும் இத்தகைய செயல்களைச் செய்கின்றனரே அவர்களுக்கும் செத்தார்க்கும் வேறுபாடு உண்டா? நம்பிக்கையோடு ஏற்று உபசரிக்கும் வீட்டில் தீமை புரிந்து ஒழுகிவரின் அறவுணர்ச்சி அற்றவன் செத்த புணம் என்றுதானே கூறுவர். மானம், மரியாதை, நம்பிக்கை அனைத்தையும் சாகடித்து அறத்தையும் பொருளையும் இழந்து நிற்கும் பொருளை கண்ணால் கண்டு ரசிக்க முடியுமா?

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'' (குறள் : 148)

நாம் மாற்றான் மனைவாழ்வை காப்பதும் ஒரு பேர் அறம். மனத்தை அடக்கி வாழ்வதோ ஆழ்ந்த ஒழுக்கம் என்ற பெமையை பெரும் நல்லவர்கள் எப்போதும் நலத்துக்குரியவரே பிறர் மனைவியின் தோல் நலம் இனிது என மயங்கியோருக்கு உலக நலம் இல்லை. கொடும் காற்றும் கொந்தளிப்பும் தோன்றி கொந்தளிப்பு ஏற்பட்டு இதயம் நடுங்க இறுதியல் மாழ்வர். உலம் நிலை பிறழ்ந்தால் அழிவு நிச்சயம். இல்லற வாழ்வும் நிலை பிறழாமல் இருக்குமாயின் அழிவு இல்லை. எனவே எப்போதும் அறவெல்லையை மீறாமல் வாழ வேண்டும். அறம் அல்லாதவைகளை சில போது செய்ய நேரினும் இல்லறத்தான் என்பவன் தன்னெல்லை மீறாமல் பிறர் மனையை நயவாமல் வாழ வேண்டும். அதில் எல்லா அறமும் அடங்கி அமைதி அளிக்கும். குடும்பமும் பாதுகாப்போடு நின்று தழைக்கும்.

அடக்கத்தின் பெருமையை அறிந்து கொள்ளாத பலரும் அடங்கி நடப்போரை ஏளனப் பொருளாக எண்ணி அலட்சியப்படுத்துவதுண்டு சில போது அவர் தம் பொறுமையை சோதிக்கவும் முன்நிற்பர். அப்போதும் அசையாதிருந்தால் அதைவிட பெருந்தவம் வேறொன்றுமில்லை. முடமையால் மனிதத்தன்மை இழந்த போது நெறியின் நீங்கிய செயல்களை நம்மேல் பிறர் செய்யினும் பொறுத்துக் கொள்வது புனிதமானது. புகழ்வதற்குரியது.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை'' (குறள் : 151)

நிலமானது தன்னை குழி பறிப்பவர்களையே தாங்கி நிறுத்துவது போன்று நம்மை இழித்துப் பேசுவோரையும் தமக்குத் துன்பம் செய்வோரையும் தாங்கித் தான் தீர வேண்டும். பொறுத்தல் சுமத்தல் தாங்கல் இவையனைத்தும் பொறுமையை பின்பற்றிட வேண்டும் என்பதையே நமக்கு உணர்த்துவனவாகும்.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வு பண்பட்ட வாழ்வாக அமைய விரும்பும் போது அவனுடைய செயல்கள் மாத்திரமன்றி, உணர்வுகளையும் சுகாதாரமான நிலையில் வைத்திருப்பது மிகவும் அவசியமானதாகும். இதனால் அழுக்காறு கொண்ட மனம் ஒரு போதும் அமைதி பெறாது. சாக்கடை நீராகவே காணப்படும். இதனால் ஒரு போதும் நறுமணத்தை உண்டு பண்ணாது. எனவே உள்ளம் திருந்தி, உடலும் வலுப்பெற்றால் எண்ணற்ற தடைகள் இருந்த போதிலும் இறுதி வரை பாடுபடும் நெஞ்சம் ஒருவனிடம் நிலை பெற முடியும். இதனாலையேதான் பொறாமைக் குணம் யாருக்கும் கூடவே கூடாது. என்பதையே அழுக்காறாமை என்று வள்ளுவர் பெருமன் கூறியுள்ளார்.

ஒழுக்கத்தின் ஒரு பகுதியாக வள்ளுவர் கூறுவது அழுக்காறு என்பதையே. அழுக்காறு ஒரு தீய சக்தி என்பதை எல்லோரும் அறிவோம். பொறாமை தோன்றா உயரிய ஒழுக்க நெறி என்று அனைவரும் நினைக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி வாழ்ந்தும் காட்ட வேண்டும். அழுக்காறு இல்லாத இயல்பை ஓர் ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவரின் குறிக் கோள் ஆகும்.

''ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு'' (குறள் : 161)

அழுக்காறு ஏன் தோன்றுகின்றது என்பதை நோக்கினால் மிக்க ஆசை, திறமை இன்மை, தனக்குரிய இடம் தவறிவிடுமோ என்ற அச்சத்தால் எளிய வழியில் லாபம் பெறும் எண்ணம் என்பவற்றால் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி அடுத்தவர் அனுபவிக்கும் இன்பம் தனக்கில்லையே என்ற ஏக்கமும் பொறாமைக்கு வித்தாகலாம்.

நடுவுநிலமை அதிகாரத்தின் ஊடாக பிறருடைய பொருள்கள் மீது ஆசை கொள்ளவோ, அப்பொருளை நாம் எடுக்கவோ கூடாது. அவ்வாறு செய்வதை தவறு அல்லது குற்றம் என்று உணர்த்துகின்றார் வள்ளுவர். மனச்சாட்சி என்பது எல்லோருக்கும் உள்ளான ஒன்று. தவறு செய்ய அஞ்சும் மனிதன் மனச்சாட்சிக்கு பயந்தவன் ஆகிறான். எனவே அத்தகைய மனச்சான்றை ஒதுக்கிவிட்டுப் பிறர்க்குரிய அரும் பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்புகிறவரின் குடியும் கெட்டொழிந்து பழியும் வந்து சேரும் என்கின்றார். அதாவது நடுவுநிலைமை இல்லாமல் பிறர்க்குரிய நல்ல பொருளை ஒருவன் அநீதியாக கவர விரும்பினால் கவர்ந்தவனின் குடும்பம் அழியும் குற்றமும் அப்போதே வந்து சேரும், இதனையே வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

''நடுவுஇன்றி நன்பொருள் வெ∴கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்'' (குறள் : 171)

நடுவுநிலை தவறுவது நாணித் தலைகுனியத் தக்கது என்று நினைப்பவர்கள் தமக்கு ஒரு பயன் கிடைக்கும் என்பதற்காக பழிக்கப்படும் செயலில் ஈடுபடமாட்டார்கள். அதாவது நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர் பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிப் பழியான செயல்களைச் செய்யார். அதுமாத்திரமின்றி பிறர் பொருளைக் கவர்ந்து அனுபவிக்க எண்ணிப் பழி தரும் செயல்களை, நீதிக்கு அஞ்சுபவர் செய்யமாட்டார்.

புறங்கூறலாவது ஒருவருடைய எதிரில் அவனுடைய நற்குணங்களை போற்றிக் கூறுவதும் அவன் இல்லாத இடத்தில் அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கூறுவது கீழான பண்பாடாகும். ஒருவனிடமுள்ள குற்றங்கள் பற்றியே விரித்துக் கூறி மகிழ்வது நல்ல பண்பாகாது என்பதை தெரிந்தும் இவ்விதம் செய்வதையே சில தீயகுணமுள்ளவர்கள் விரும்பிச் செய்கின்றனர் இது தவறான செயலாகும்.

ஒருவன் நன்மைகளை விட தீமைகளையே செய்தாலும் துன்பம் இல்லை ஆனால் அவன் புறங் கூறாமல் மட்டும் இருக்க வேண்டும் புறங்கூறுதலால் அவ்வளவு துன்பம் ஏற்படும் என்பதை வள்ளுவர் பெருமான் உணர்த்துகிறார்.

''அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது'' (குறள் : 181)

ஒவ்வொரு மனிதனும் பெற்றுள்ள சிறப்புக்களில் சொல் மிகவும் இன்றியமையாததாகும். அத்தகைய சொல்லினால் சொல்பவன் மட்டுமன்றி கேட்பவனும் பயனடைய வேண்டும் என்ற காரணத்தினாலே பயனில சொல்லாமை என்ற அதிகாரத்தை முன்வைத்துள்ளார். மேலும் வள்ளுவர் புறங்கூறுதல் காரணமாக நம்மில் நம்பிக்கை இழந்து வெறுத்து நீங்கும் மக்கள் பொருளில் நின்று பேசிக் கொண்டிருக்கும் ஆட்களையும் வெறுக்கின்றனர் என்பதற்காக பயனற்ற பேச்சால் பிறரை அலுப்படையச் செய்வோம். வாய்சோர்ந்து வெளிப்படும் சொற்களால் பகைமையும் சம்பாதித்துக் கொள்வோம் நெஞ்சில் களக்கமில்லை. என்றாலும் பிறரது மனநிலையை புரிந்து கொள்ளாமல் வேடிக்கையாக பேசுவதும் சிலவேளை விபரீதம் ஆவதுண்டு தாழ்மை உணர்ச்சியால் உந்தப்பட்டு தானும் விசயம் தெரிந்தவன் என்று காட்டிக் கொள்ளும் வேகத்தில் சிலர் கதையளப்பது கேலிக் கூத்தாக முடிகிறது. தேவையறிந்து பேசத்தெரியாதவர்கள் தம்மதிப்பை இழப்பதோடு அல்லாமல் அறிவிலி என்ற புறக்கணிப்புக்கும் ஆளாகி விடுவர்.

பயனற்ற வார்த்தையாடலால் பலரும் நம்மை வெறுப்பார்கள். முடிவில் அனைவருக்கும் ஏளனப் பொருளாகி மதிப்பிழக்க நேரிடும் அதுமட்டுமன்றி உளறுவாயன் புத்தி கிடையாதவன் என்று உலக மக்கள் எள்ளி நகையாடுவதற்கு துணிந்து விடுவார்கள். மறந்து போய் அன்பற்ற காரியங்களைச் செய்தாலும் நண்பர்கள் மன்னித்து விடுவார்கள். ஆனால் அர்த்தமற்ற வார்த்தைகளைக் கேட்டால் வெறுக்கத் தொடங்குவர். போதையின் கூட்டுறவை பெற்றுவிட்டோமே என்றெண்ணி மனம் வருந்தி அடுத்தவர் முன்னிலையில் நம்மை அவமதிக்கவும் செய்வர். பயனில பலர் முன் சொல்வது ஒரு போதும் விரும்பத்தக்கதல்ல. செயல் தரும் தீமையை விட சொல் தரும் தீமை இடைவிடாது தோன்றிக் கொண்டே இருப்பதாலும் வெறுப்பை வேரூன்றச் செய்வதாலும் நயன் நட்டார் கண் செய்தலின் தீது என்கின்றார். பயனில சொல்லும் நபர்களை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளப் பலர் வெட்கப்படுவதையும் உளறிக் கொட்டி மானத்தை வாங்காதே என்று சினங் கொள்வதையும் வாழ்வில் நேரடியாகப் பார்த்திருக்கலாம். பலரும் பயனற்ற சொற்களைப் பாதுகாப்புக் கருவியாக நினைத்துக் கொள்கின்றனர். நெஞ்சத்தில் அன்பில்லை என்றாலும் அன்பு தமக்கே உண்டு. அடுத்தவர்க்கு கொஞ்சமும் இல்லை என்பது போல் பேசுகின்ற சொற்களும் உறவை மறைமுகமாக வெட்டி முறிக்கும் அந்நிலையில் அச் சொற்களும் பயனில்லாச் சொற்களே ஆகும்.

''நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை'' (குறள் : 193)

பேச்சளவில் மறைந்து நிற்கும் கொடுமை, செயலளவில் உருவெடுக்கும் போது வாழ்வின் ஆணிவேரையே கவ்வியெறியும் அபாயம் காத்து நிற்கும். இப்படியும் தீமைபுரியும் பலர் இருப்பார்களா? எனும் அளவிற்கு அரண்கட்டி வாழ்கின்றார்கள். இதயமற்ற தீவினையாளருக்கு மனச்சாட்சியும் சிந்திக்கும் ஆற்றலும் இல்லாதொழிவதால் ஒருவித அசட்டுத்தைரியத்திற்கு ஆளாகி முடிவில் அழிந்தும் போகின்றனர். மாறாக விழுமிய எண்ண அலைகள் தோன்றி மனத்தில் படிந்து கிடக்கும் அழுக்குகளை அகற்றி வருவதால் பெரியோர் வாழ்வு எப்போதும் பெருமையோடு பொலிகிறது.

''தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு'' (குறள் : 201)

உலக நடையினை அறிந்து செய்தல் உலகநடை வேதநடை போல அற நூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யுந் தன்மைத்தாகலின் ஒப்புரவு அறிதலென்றார். மேல் மன மொழி மெய்களால் தவிரத் தகுவன கூறினார்.

வாழ்க்கையை ஒரு தருக்கப் பொருளாக மாற்றி விவாதிப்பதில் பயனொன்றுமில்லை. அதனை ஒரு கலையாக்கும் பெரும் பயிற்சிதான் எல்லோருக்கும் தேவை. கலையாக்கும் முயற்சியில் தத்துவங்கள் உள்ளடங்கி இருப்பது இயற்கை. ஆனால் கலப்படமற்ற வறட்டுத் தத்துவம் வாழ்க்கையைப் படைத்துவிடாது. இயல்பான சிறந்த பண்புகள் கொலுவிருந்து தன்னையே முழுமையாக உலகிற்குத் தரவேண்டும். பயனை மறந்து பணியாற்றும் தீவிரமும், வைராக்கியமும் இயல்பாக அமையுமென்றால் வாழ்க்கையென்னும் வீணையிலோர் நாதம் பிறக்கும். இழந்துவரும் அதன் சுருதியோடு இதயத்துடிப்பு உலகெங்கும் பரவி இன்பக் கலையொன்று உருவாகும். அப்போது உலக வாழ்வேதான் வாழ்வு என்றெண்ணும் பேதமற்ற நிலை பிறந்துவிடுகிறது. தனிமனிதன் அவ்வாறு சமுதாயத்தில் இரண்டறக் கலந்தும், கரைந்தும் சுவையூட்டும் போது வாழ்க்கை ஒரு அத்வைதம் ஆகிவிடும். அதனையே ஒப்புரவறிதல் என்று உணர்த்துகிறார்.

வானமும், பூமியும் நிறைந்து பெய்கின்ற மழைக்காட்சி எவ்வளவு இனிமை தருகிறது. வாழத்துடிக்கும் உலகுக்கு வழிகாட்டி வானமும் பூமியுமே. மழை பெய்யும் போது கைமாறு எதிர்பார்த்தா பெய்கின்றது? இல்லையே, அதனை இயற்கை, மேகத்தின் இயல்பு என்றெல்லாம் கூறுகின்றோம். அவ்வாறெனில் அத்தகைய இயல்புணர்ச்சி மனிதரிடம் அரும்ப வேண்டும். கடப்பாடு, கடமை எனும் போது செயற்கைத் தன்மை, வற்புறுத்தல் அமைவதாக பலர் கருதலாம், அதற்காகவேதான் மழையின் பணியை எடுத்துக்கூறி கடப்பாடு என்பது கைம்மாறு கருதாத பெரும்பணி என்பதை உணர்த்தி மழையைப் போன்றதொரு வாழ்க்கை மனிதனுக்கு தேவை என்பதையும் தெரியப்படுத்துறார்.

“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு” (குறள் : 211)

பொழிகின்ற மழை மீண்டும் மீண்டும் அச் செயலையே விரும்பி மேற்கொள்வது போலும் இடையறா முயற்சியில் இல்வாழ்வான் ஈடுபட்டுப் பொருள் திரட்டி உலக மக்களுக்கு வேளாண்மை செய்தல் வேண்டும். பகுத்தறிவில்லாத மழையானது தனது புனிதத்தன்மையை நினைத்த இடமெல்லாம் நீர் கொடுக்கிறது. ஆனால் அறிவுடைய மனிதன் அதுபோல் கொடைமடம்படுதல் அழகெனினும், தர்க்கார்க்கு அளிப்பதே தருமமாகும். அதனால்தான் விரைந்த பயன் எல்லோருக்கும் கிடைத்து விடுகிறது. விரையம் என்பது அறவாழ்வில் அமைவதில்லை.

**முடிவுரை**

மனிதன் தனது பிறப்பினை பூரணமாக்குவதற்கு அவனுக்கு இல்லறம் தேவை அதே சமயம் இல்லறத்தினை முழுமைப்படுத்துவதற்கு மெய்யியல் தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதனால்தான் வள்ளுவர் இல்லறம் வகுத்தார். திருக்குறள் கூறும் இல்லறத்துக்கான அனைத்து விடயங்களும் தமிழர் வாழ்வியல் மரபில் பேணப்பட்டுள்ளது என்பதை இதன்வாயிலாக நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். ஒரு மனிதன் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டினால் இல்லறவியலில் கூறப்பட்டுள்ளபடி ஒழுகினால் அன்றி அவனால் சிறப்பாக வாழ முடியாது எனும் அளவிற்கு இல்லறம் பற்றிய மெய்யியல் சிந்தனைகள் பூரணமானதாக முழுமை பெற்ற வகையில் திருக்குறள் எமக்கு தந்திருக்கிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. இரகுபரன்.க., தேவகுமாரி.ஹ., (2010), அறநெறிக்காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், சங்கரப்பிள்ளை மண்டபம் கொழும்பு தமிழ்ச் சங்கம்.
2. நாமக்கல் கவிஞர்., (1954), திருவள்ளுவர் திடுக்கிடுவார், மயிலாப்பூர் சென்னை 4: இன்ப நிலையம்.
3. புழனியப்பா பிரதர்ஸ், (1962), திருக்குறள், கோனார் மாளிகை சென்னை.
4. சோமசுந்தரம்.கு., (1995), மனித விழுமியங்கள், கொழும்பு-06:ரஸி வெளியீடு.
5. வரதராசன்.மு., (1959), திருவள்ளுவர் வாழ்க்கை விளக்கம், சென்னை-1:காஸ்டன் அச்சகம்
6. சிவானந்தமூர்த்தி.க., (2012), ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும், கொழும்பு-12: லங்கா புத்தகசாலை.
7. ஜமாஹிர்.பீ.எம்., (2010), மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும், கண்டி நதா வெளியீடு.
8. பத்மநாதன்.சி., (2011), அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும், கொழும்பு - 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.